




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உறையூர், மெத்தடிஸ்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 05.09.2024 அன்று விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் ஆசிரியர் தினவிழாவை முன்னிட்டு, ஆசிரிய பெருமக்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணப்பிரியா, தலைமையாசிரியர் திருமதி.வசந்தி, நகரப் பொறியாளர் சிவபாதம், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய கழகச் செயலாளர் பி.டி.சந்திரன் தலைமையில்

# பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவள்ளூர், செப்.7 –

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் பி.டி.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பொதுக்குழு உறுப்பினர் பி. ரவீந்திரநாத், நிர்வாகிகள் திருமலை லோகநாதன், பாரதி, எம். கே.சுப்பிரமணியம், கோவர்தன், முரளி, சேனா, பிடி. குமரேசன், மு.சிவகுமார், எத்திராஜ், வி.வி. மணி, செல்வம், சிவா, மாரிமுத்து, சோமசுந்தரம், மணிகண்டன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் கூட்டணிக் கட்சி வேட்பாளரை வெற்றி பெற செய்ததற்கு கழக நிர்வாகி அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

2026 சட்டமன்ற தேர்தல் வரும் இருப்பதால் அதற்கான பணிகளை இன்று முதல் இருந்து மேற்கொண்டு மீண்டும் கழகத் தலைவர் அவர்களே முதலமைச்சராக அரியணை ஏற வைப்போம்.

கழக அரசின் சாதனைகளை சுவர் விளம்பரப்படுத்தி மற்றும் கழகத் தலைவர் செய்து வரும் சாதனைகளை இளைஞர்களும் எடுத்துக் கூறி அதிக உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் கிளைக் கழகத்தில் கழகக் கொடிகளை புதுப்பித்து கழக கொடிகளை ஏற்ற வேண்டும் . நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் ஒன்றிய கழகத்தில் இருந்து அதிக அளவில் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஓ.ஏ. நாகலிங்கம், ராஜேஸ்வரி, ரவீந்திரநாத், மு.சுப்பிரமணியம், ம.கிரண், இ.கே.உதயசூரியன், டி.எம். சுகுமார், டி.ஆர் திலீபன், சித்திக்அலி, சிலம்பு பன்னீர் உள்பட கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

முடிவில் ஏழுமலை, தேவராஜன், ராஜேந்திரன் நன்றி கூறினார்கள்.

### பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி

# வி.எஸ்.பெரியசாமி மறைவு!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – வீ.ஜெகதீசன் அஞ்சலி!

பெரம்பலூர், செப். 7 -

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்தைச் சேர்ந்த மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர், வி.எஸ்.பெரியசாமி வயது 50. 03.09.2024 அன்று காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த வி.எஸ்.பெரியசாமிக்கு தனலெட்சுமி என்கிற மனைவியும், சக்திராஜ், வடிவழகன் எனும் இரண்டு மகன்களும், கௌரி என்கிற மகளும் உள்ளனர். அவரது உடல் வேப்பூர் கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன்,கு. சின்னப்பா, கா.சொ.க. கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் 04.09.2024 அன்று வேப்பூர் கிராமத்தில் தகனம் செய்யப்பட்டது.



பெரம்பலூர் முத்துகிருஷ்ணா மக்கள் மன்றத்தில், பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் தி.மு.க. உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெரம்பலூர் ஒன்றியச் செயலாளர் எம்.ராஜ்குமார் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்,பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் ஒன்றியத்திற்குட்பட்ட, கண்டமானடி, வி.அரியலூர், கொளத்தூர், வேலியம்பாக்கம், அத்தியூர் திருவாதி, பிடாகம், கண்டம்பாக்கம், மரகதபுரம் ஆகிய ஊராட்சிகளின் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமை துவக்கி வைத்து, மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், ஒன்றியக் குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், வனிதா ஹரிராமன், புகழ் செல்வகுமார், இரா.கேசவன், உதயகுமார், ஜி.தவமணி, தேவகிருஷ்ணன், கலியமூர்த்தி , பிரசன்னா தேவி செல்வகுமார், ஆனாங்கூர் என்.ஆர்.மணி, ஆதிலட்சுமி காசிநாதன், வீரா ஏழுமலை, தேவி ரமேஷ், தனசேகரன், அய்யனார், ஞானஜோதி, மீனாட்சி, புகழேந்தி, தமிழரசி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### எடப்பாடி பழனிசாமியின் ஆட்சிதான்

# மருத்துவத் துறையை கருப்பு நாட்களாக்கிய அலங்கோல ஆட்சி!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை, செப். 7 -

எடப்பாடி பழனிசாமி அலங்கோல ஆட்சி - மருத்துவத்துறையில் கருப்பு நாட்கள் என்றும் எடப்பாடி ஆட்சியில் 116 மருத்துவர்களுக்கு தண்டனை இடமாற்றம் (Punishment Transfer) தந்து, அதில் மரு. லட்சுமி நரசிம்மன் மன அழுத்தம் காரணமாக உயிர் நீத்தார் என்பது காலத்தால் அழியாத உண்மை என்றும் தெரிவித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கடந்த வாரம் கூட அவருக்கு முழுமையான வகையில் ஒரு பதிலை பத்திரிகையாளர் சந்திப்பின் மூலம் தெரிவித்தேன். எதிர்க்கட்சி தலைவர் என்பது ஒரு துறையில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொண்டு பேசுவது என்பது அவசியமான ஒன்று, பொதுவாக மருத்துவத்துறையை பொறுத்தவரை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாள் இந்த துறையில் பொறுப்பேற்கும் போது இருந்த குளறுபடிகளும், குழப்பங்களும் ஒரு மிகப்பெரிய அளவில் இருந்தது என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். 354 என்கின்ற அரசாணையை அமல்படுத்தக் கோரி மருத்துவர்கள் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடத்திய போராட்டங்களை யாரும் மறுத்து விட முடியாது, தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தினார்கள் என்பதற்காகவே ஒரு 116 மருத்துவர்களுக்கு Punishment Transfer என்று அவர்களுக்கு தண்டனை இடமாற்றத்தை தந்தார்கள். இதுவரை எந்த அரசும் செய்யாத ஒரு கொடும் காரியம் அது.

மருத்துவர்கள் என்பது இந்த துறையில் மட்டுமல்ல உலக அளவில் மதிக்கப்பட வேண்டிய ஒரு பணியாளர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். உரிமைகளுக்காக போராடினால் அவர்களை அழைத்துப் பேச வேண்டும், அவருடைய உரிமைகளை கோரிக்கைகளை கேட்க வேண்டும், அதை முடிந்தவரை தீர்க்க வேண்டும், தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருந்தால் அதற்கு கால அவகாசம் அரசு கேட்டு தீர்த்து வைக்கிறோம் என்று சொல்ல வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 293, 354 ஆகிய இரு அரசாணைகள் பற்றி அந்த இரு தரப்பு மருத்துவர்களுக்கும் இது மாறுபட்ட கருத்துக்கள் இருந்தது. மிகப்பெரிய சங்கங்களுக்கு இடையே அந்த மாறுபட்ட கருத்துக்களை களைவதற்கு நானே 34 தடவை அழைத்துப் பேசி இருக்கிறேன், இரு சங்கங்களையும் 34 முறை கலந்து பேசி அவர்களுக்குள் ஒருமித்த கருத்தை உருவாக்கி இன்றைக்கு அந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது. அதேபோல் 116 Punishment Transfer பெற்ற டாக்டர்களில் லட்சுமி நரசிம்மன் என்பவர் இங்கிருந்து சேலம் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டு அவர் மன அழுத்தத்தின் காரணமாக இறந்தே போனார். இப்படித்தான் மருத்துவத்துறையை நிர்வகித்து வந்தார்கள். எடப்பாடி பழனிச்சாமியாக இருந்தாலும், அவருடைய ஆட்சிக்காலமாக ஆக இருந்தாலும், அதற்கு முன்னாள் இருந்த அவருடைய அந்த பத்தாண்டு கால ஆட்சியில் மருத்துவ துறையின் லட்சணம் இதுவாகத்தான் இருந்தது. போராடுகின்ற மருத்துவர்கள் எல்லாம் கொஞ்சம் கூட கருணை இல்லாமல் Punishment Transfer தந்து அதன்மூலம் ஒரு உயிரிழப்பும் கூட ஏற்பட்டு இருக்கிறது.

#### 1021 மருத்துவர்கள் பணிநியமனம்

அதோடு மட்டுமல்ல ஒரு முறை 2000 மருத்துவர்களை Walking interview என்கின்ற வகையில் பணிக்கு எடுத்தார்கள். பணிக்கு எடுப்பது என்பது தவறில்லை. எந்த அரசு பணிக்கு எடுத்தாலும் ஒன்று சான்றிதழ் சரிபார்ப்பு, மற்றொன்று இன சுழற்சி முறை (Communual Rotation). இந்த Communual Rotation இல்லாமல் எந்த அரசுப்பணிக்கும் யாரையும் நியமிக்க கூடாது. இந்திய அளவில் மிகப்பெரிய சர்ச்சைக்குரிய செய்தி அது.

கடந்த ஆட்சியில் 2000த்திற்கும் மேற்பட்டவர்களை Communual Rotationஇல்லாமல் பணிக்கு எடுத்தார்கள். தற்போது அதனையெல்லாம் சரி செய்து மருத்துவர்களாக இருந்தாலும், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களாக இருந்தாலும், இன்று அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் தீர்வு என்கின்ற வகையில் முறையாக செய்துக் கொண்டிருக்கிறோம். ஒப்பந்த பணியாளர்களுக்கும் பல்வேறு வகைகளில் தீர்வு காணப்பட்டிருக்கிறது. கோவிட் காலங்களில் பணியாற்றியவர்கள் என்கின்ற வகையில் அவர்களுக்கு இந்த Merit Marks என்கின்ற வகையில் MRB மூலம் நடைபெற்ற தேர்வுகளில் 5 மதிப்பெண் தரப்பட்டது. இதில் 1021 மருத்துவ பணியிடங்கள் நிரப்புகின்ற நிலையில் மருத்துவர்கள் வைத்த கோரிக்கை 2 ஆண்டுகள் முழுமையாக கோவிட் பணி செய்தவர்களுக்கு 5 மதிப்பெண் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாக பணி செய்தவர்களுக்கும் அந்த மதிப்பெண் வழங்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை வந்தபோது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,



ஓராண்டு பணி செய்தவர்கள் கொரோனா காலத்தில் இரண்டு ஆண்டு பணி செய்தவர்கள் மூன்று வகையில் ஒன்றரை ஆண்டு என்கின்ற வகையில் அந்த மதிப்பெண்கள் பிரித்து வழங்கப்பட்டது.அந்தவகையில் 1021 மருத்துவர்களில் கொரோனா காலத்தில் பணியாற்றிய ஒட்டுமொத்த மருத்துவர்களுக்கும் அரசில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது.

அந்த அரசுப் பணியில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்த அந்த நேரத்திலும் கூட இதுவரை இந்திய வரலாற்றில் வேறு எந்த துறையிலும் முதல்முறையாக பணியாணைகளை பெறுபவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டது. முதல்முறை யாக பணி ஆணை பெறுபவர்களை அலுவலகத்தில் உள்ள மேல் அதிகாரிகள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு கோயம்புத்தூரில் இருப்பவர்களுக்கு சிதம்பரத்தில் வேலை தருவார்கள், கன்னியாகுமரியில் இருப்பவர்களுக்கு ஒசூரில் வேலை தருவார்கள். அவர்களுக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், தங்களுக்கு தங்கள் ஊரில் கிடைக்காத நிலை, தங்கள் குடும்பத்தை பார்க்க முடியாமல் 300 400 கிலோமீட்டர் அப்பால் வேலை கிடைக்கிறது என்கின்ற சங்கடத்தில் தான் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

முதல்முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 1021 மருத்துவர்களுக்கும், 977 செவிலியர்களுக்கும் முதல் பணியாணை தருகிற போதே கவுன்சிலிங் நடத்தி அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கு பணியாணைகள் தரப்பட்டது. கடந்த 20 நாட்களுக்கு முன்னாள் கூட 946 மருந்தாளுநர்கள், 523 உதவியாளர்கள் என்று 1523 பேருக்குகலந்தாய்வு நடத்தி பணி ஆணைகளை தந்திருக்கிறோம்.

#### மருத்துவ நியமனம் (ம) கட்டமைப்பு

இந்த அரசு பொறுப்பேற்றதிற்கு பிறகு மருத்துவ பணியாளர் தேர்வாணையம் (MRB) என்கின்ற அந்த அமைப்பின் சார்பில் மட்டும் தரப்பட்டிருக்கிற பணிகளின் எண்ணிக்கை 1947 உதவி மருத்துவர்கள், 1291 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், 977 தற்காலிகமாக அதிமுக ஆட்சி காலத்தில் அவர்களால் பல்வேறு குழப்பங்களுக்கிடையில் நியமிக்கப்பட்ட செவிலியர்களை நிரந்தரப்படுத்தி அவர்களுக்கான ஆணைகள் தந்திருப்பது. கடந்த 15 நாட்களுக்கு முன்னாள்946 மருந்தாளுநர்கள், கடந்த 5 நாட்களுக்கு முன்னாள் தரப்பட்ட 127 உணவு பாதுகாப்பு அலுவலர்கள் என்று 5288 புதிய பணி நியமன ஆணைகள் தரப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இந்த துறைக்கு தேவையான இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள். சுகாதார ஆய்வாளர் கள் போன்ற பணியிடங்கள் 1583 நிரப்பப்பட்டு இருக்கிறது. ஆக இந்த துறையில் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் 6,744 மருத்துவ துறை பணியாளர்களுக்கு புதிய பணி ஆணைகள் தரப்பட்டிருக்கிறது. கலந்தாய்வுகளின் மூலம் இதுவரை இந்த மூன்று ஆண்டுகளில் பயன்படுத்திய மருத்துவர்கள் எண்ணிக்கை 12,147 பேர், செவிலியர்களை பொறுத்தவரை 9535 பேர், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் பொறுத்தவரை 14,783 பேர் ஆக மொத்தம் 36, 465 பேர் பணியிட மாற்றம் பெற்றிருக்கிறார்கள். இந்த தகவல் எல்லாம் எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை, யாரையாவது அவர் கேட்டு தெரிந்து கொண்டிருக்க வேண்டும், தெரிந்து கொள்ளாமல் பணிநியமனங்கள் இல்லை என்கின்ற ஒரு தவறான தகவலை தெரிவித்து இருக்கிறார்.

எடப்பாடி பழனிச்சாமி அவர் பொறுப்பேற்றிருந்த 4 வருடங்கள், அதற்கு முன்னாள் ஒரு ஆறு வருடங்கள் 10 ஆண்டு காலத்தில் இப்படி எத்தனை பணியிட மாற்றங்களை Transparent பணியிட மாற்றங்களை செய்திருக்கிறார் என்கின்ற தகவலை அடுத்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிலோ அல்லது அறிக்கையின் வாயிலாக தெரிவித்தால் நன்றாக இருக்கும். அதையும் கடந்து நான் மிக தெளிவாக தொடர்ந்து சொல்லி வருவது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் இருக்கிற 8,713 துணை சுகாதார நிலையங்கள், அதேபோல் 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள். மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு தொடர்ந்து ஒவ்வொன்றுக்குமே ஒவ்வொரு தொகுதிகளுக்கும், ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் இது வரை 1000த்திற்கும் மேற்பட்ட புதிய கட்டிடங்கள் 15வது நிதியாணையத்தின் மூலம் கட்டப்பட்டு ஒவ்வொன்றாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 10என்கின்ற வகையில் திறந்து வைத்துக்கொண்டு வருகிறேன்.

நேற்று அரியலூரில் 9 கட்டிடங்களும், அதற்கு முன் நாள் கும்பகோண த்தில் 3 மருத்துவக் கட்டிடங்களை திறந்து வைத்திருக்கிறேன். இப்படி வாரத்திற்கு 3 நாட்களில் புதிய மாவட்ட கட்டிடங்களை திறந்து வைத்திருக்கிறேன், இப்படி இந்த 3 ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடங்களும், திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற கட்டிடங்களையும் நாங்கள் பட்டியல் போடுகிறோம். இதில் ஏதாவது ஒன்றை அவர் காலத்தில் அவர் செய்திருப்பாரா என்று சொல்ல வேண்டும்.

அது மட்டும் இல்ல இந்த மருத்துவமனைகளுக்கான ஆய்வு என்கின்ற வகையிலேயோ எத்தனை மருத்துவமனைகளுக்கு சென்றிருக்கிறோம் என்கின்ற வகையிலோ நான் வெளிப்படையாக தகவல்களை தர தயாராக இருக்கின்றேன், அவர் பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் அவராக இருந்தாலும் அவர்காலத்தில் இத்துறைக்கு பொறுப்பேற்ற அமைச்சராக இருந்தாலும் எத்தனை மருத்துவமனைகளுக்கு சென்றிருக்கிறார்கள் என்கின்ற பட்டியலும் தந்தாலும் நன்றாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சி, தென்னூர் பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத் துறையின் சார்பில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட் மூலம் தென்னூர் – வேளாங்கண்ணி புதிய பேருந்து வழித்தடத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.